



கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டம், ரிஷிவந்தியம் தெற்கு, கிழக்கு ஒன்றியங்கள் மற்றும் மணலூர்பேட்டை பேரூர் கழகங்களைச் சேர்ந்த ஒன்றிய, ஊராட்சி, கிளைக் கழக இளைஞர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம், ஒன்றிய கழக செயலாளர்கள் மற்றும் இளைஞர் அணி அமைப்பாளர்களின் முன்னிலையில் பாவந்தூர் தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இந்த ஆலோசனைக் கூட்டத்தில் கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு கழக ஆக்கப் பணிகள் குறித்து பல்வேறு ஆலோசனைகளை இளைஞர் அணி நிர்வாகிகளுக்கு வழங்கி சிறப்புரையாற்றினார், மேலும் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் ச.அ.பெருநற்கிள்ளி உட்பட மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், மாவட்ட, ஒன்றிய, ஊராட்சி, கிளைக் கழக இளைஞர் அணி நிர்வாகிகள் 300க்கும் மேற்பட்டோர் திரளாக கலந்து கொண்டனர்.



வேலூர் மாநகராட்சி மண்டலம் – 4 வார்டு எண் 17ல் வேலூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2023–2024ஆம் ஆண்டில் ரூ.15.00 லட்சம் செலவில் அமைக்கப்பட்ட மேற்கு பகுதி நுழைவாயில் புதிய பயணிகள் நிழற் கூடத்தை மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார் . உடன் மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், மண்டல குழு தலைவர் வெங்கடேசன், மாமன்ற உறுப்பினர்கள் காஞ்சனா கிருஷ்ணமூர்த்தி, வீ.எஸ்முருகன், ஜெய்சங்கர் மற்றும் அறங்காவலர் குழு உறுப்பினர் நீதிஎன்ற அருணாசலம் மற்றும் கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

### தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து புதிய கடைகளுக்கு அடிக்கல்!

# ரூ.12 லட்சத்தில் புதிய ரேஷன் கடை கட்டிடம்!

## மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்!

நெல்லை,மே.27–

நெல்லை மத்திய‘ மாவட்டப் பொறுப்பாளர், பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப் தனது சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 12 லட்சம் மதிப்பில் புதிய ரேஷன் கடை கட்டிடத்தை துவக்கி வைத்தும், ரூபாய் 15 லட்சம் மதிப்பில் புதிய ரேஷன் கடைக்கு அடிக்கல் நாட்டியும்,தலா ரூபாய் 2 லட்சம் மதிப்பில் 3 இடங்களில் சிறு மின்விசைத் தொட்டி ஆகியவற்றை மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன், துணை மேயர் கே.ஆர்.ராஜ் ஆகியோர் முன்னிலையில் துவக்கி வைத்தார். அதன்படி ரூபாய் 18 லட்சம் மதிப்பில் முடிவுற்ற திட்டப் பணிகளையும், ரூபாய் 15 லட்சம் மதிப்பில் புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும், அதாவது ஆக மொத்தம் ரூபாய் 33 லட்சம் மதிப்பில் பணிகளை துவக்கி வைத்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்தார்.

திராவிட மாடல் முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்கவும், திராவிட மாடல் ஆட்சியில் எல்லோருக்கும் எல்லாம் என்ற அடிப்படையிலும், கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படியும், நெல்லை மாவட்டப் பொறுப்பு அமைச்சர், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சரும், கழக முதன்மைச் செயலாளருமான கே.என்.நேரு அறிவுறுத்தலின்படி நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப் தொகுதியில் பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தும்,

தொடர்ந்து மக்களின் பல்வேறு கோரிக்கைகளை ஏற்றும் தொகுதியில் அடிப்படை தேவைகளை மிகவும் விரைவுப் படுத்தி,செயல்படுத்தி வருகிறார்.

அதன்படி நெல்லை மாநகராட்சி 38 வது வார்டு வி.எம்.சத்திரத்தில் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 15 லட்சம் மதிப்பில் புதிதாக ரேஷன் கடை அமைக்கும் பணியை அடிக்கல் நாட்டி நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ.துவக்கி வைத்தார். தொடர்ந்து 35 வது வார்டில் தெற்கு பஜார் முத்தாரம்மன் கோவில் தெருவில் ரூபாய் 2 லட்சம் மதிப்பில் சிறு மின் விசைத் தொட்டியையும்.

பின்னர் பாளை மண்டலம் மனகாலம் பிள்ளை நகர் 7வது வார்டில் ரூபாய் 12 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட புதிய ரேஷன் கடையை துவக்கி வைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு உணவு பொருட்களை வழங்கியும், திருமலை தெரு, பாரதியார் தெரு ஆகிய 2 இடங்களில் தலா ரூபாய் 2 லட்சம் மதிப்பில் சிறு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளையும் துவக்கி வைத்து பொதுமக்கள் பயன்பாட்டிற்காக அர்ப்பணித்தார். அதனை தொடர்ந்து அதே வார்டில் பள்ளி குழந்தைகளுக்கு கல்வி உபகரணங்களையும் வழங்கினார்.

ஆக மொத்தம் ரூபாய் 33 லட்சம் மதிப்பீட்டில் திட்டப்பணிகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.இதனால் பொதுமக்கள் பெரிதும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இந்நிகழ்வுகளில் நெல்லை மாநகராட்சி மேயர்.கோ. ராமகிருஷ்ணன் துணை மேயர் கே.ஆர்.ராஜ்,பகுதி செயலாளர் அண்டன் செல்லதுரை, மாவட்ட பிரதிநிதி வல்லநாடு முத்து, மாமன்ற உறுப்பினர்கள் பாலம்மாள், பேச்சியம்மாள்,கந்தன்,7 வது வார்டு உறுப்பினர் இந்திரா,வழக்கறிஞர் தினேஷ், மாவட்ட தகவல் தொழில் நுட்பணி துணை ஒருங்கிணைப்பாளர் காசிமணி, வட்ட செயலாளர் ராஜ், டாஸ்மார்க் தொழிற்சங்க அரசன் ராஜ், மானூர் தெற்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சாமுவேல்,தச்சை பகுதி இளைஞர் அணி துணை அமைப் பாளர் மகேஷ் ஆதித்தன், அணி அமைப்பாளர்கள் லாமேக்ஸ்டீபன், அனித்தா, சௌந்தரம் முத்துராஜ், மகளிர் அணி நிர்வாகிகள் ஆனிரேக்லண்ட், தேவிகா, பகுதி துணைச் செயலாளர் முகமது கமாலுதின், முன்னாள் மாமன்ற உறுப்பினர் பாலன் என்ற ராஜா,வட்டச் செயலாளர்கள் ஆவின் கல்யாண சுந்தரம்,பேபி கோபால், ஜெயின் உசேன்,தகவல் தொழில் நுட்ப அணி ஆனந்த் மற்றும் மாரி செல்வம், பிரான்சிஸ், வி.எம்.சத்திரம் தேவேந்திரன், அய்யாதுரை, குணா, கே.டி. சி.பாலா, பழக்கண்ணன், மகாராஜா, வேலன், முப்புடாதி உள்பட கழக நிர்வாகிகள், ஊர் பிரமுகர்கள், பொது மக்கள் கலந்து கொண்டனர்.

### துணை முதல்வரின் சிறப்புமிகு திட்டங்களால்

# தமிழ்நாடு விளையாட்டுத் துறை மேம்பட்டு வருகிறது!

## என். பஞ்சம்பட்டியில் அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு!

திண்டுக்கல், மே 27–

என்.பஞ்சம்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளி விளையாட்டு மைதானம் கேலரி வசதியுடன் புதுப்பித்துக் கொடுக்கப்படும் என்று ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி உறுதி அளித்ததோடு முதல் பரிசு பெற்ற திண்டுக்கல், மேட்டுப்பட்டி அணிக்கு முதல் பரிசை வழங்கி வாழ்த்தினார். இரு தினங்கள் நடைபெற்ற மாநில அளவிலான கால்பந்தாட்ட போட்டியில் தமிழகம் முழுவதும் கால்பந்து விளையாட்டு வீரர்கள் கலந்து கொண்டனர்.

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் ஒன்றியம் என்.பஞ்சம்பட்டி ஊராட்சிக்குட்பட்ட அரசு மேல்நிலைப்பள்ளியில் மாநில அளவி லான கால்பந்தாட்ட போட்டி ஸ்கார்பியன்ஸ் புட்பால் கிளப் சார்பாக நடைபெற்றது.

தமிழகம் முழுவதும் மற்றும் கேரளா மாநில கீல்பந்தை வீரர்கள் கலந்து கொண்டனர். போட்டிகளை திண்டுக்கல் டி.எஸ்.பி.கார்த்திக், ஓய்வு பெற்ற டி.எஸ்.பி. வசந்தன், பங்குத் தந்தை பெர்னாட்ஷா ஆகியோர் துவக்கி வைத்தனர். 17 மற்றும் 18 ஆகிய இரு தேதிகளில் இரவு பகலாக



நடைபெற்ற போட்டிகளில் 27 அணிகள் கலந்து கொண்டன.

நிறைவு நாள் விழாவில் ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் கலந்து கொண்டு இறுதி போட்டியை துவக்கி வைத்தார். இதில் மேட்டுப்பட்டி எஸ்.டி, எஸ்.ஏ அணியும், என்.பஞ்சம்பட்டி ஸ்கார்பியன்ஸ் புட்பால் கிளப் அணியும் மோதின. இதில் மேட்டுப்பட்டி எஸ்.டி, எஸ்.ஏ அணி முதல் பரிசையும் என். பஞ்சம்பட்டி ஸ்கார்பியன்ஸ் புட்பால் கிளப் அணி இரண்டாம் பரிசையும் பெற்றது. வெற்றி பெற்ற வீரர்களுக்கு பரிசுகளை வழங்கி விட்டு அவர்கள் மத்தியில் பேசிய ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி தமிழகத்தில் இன்று விளையாட்டுத் துறை மேம்பட்டு வருகிறது என்றால் அதற்கு ஒரே காரணம் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களே. விளையாட்டு துறையை அவர்கள் மேம்படுத்தியது மட்டுமின்றி உலகளவில் தமிழகத்தை பேச வைத்துள்ளார்.

குறிப்பாக விளையாட்டு வீரர்களுக்கு அரசு பணியில் 3 சதவீதம் உள் ஒதுக்கீடு வழங்கியது மூலம் கிராமப்புற விளையாட்டு வீரர்களும் தேசிய அளவில் சாதனை படைத்து வருகிறார்கள் என்றார். இங்குள்ள அரசு மேல்நிலை பள்ளி விளையாட்டு மைதானத்தை சீரமைக்க வேண்டும் என விளையாட்டு வீரர்கள் கோரிக்கை விடுத்துள்ள னர். விரைவில் இந்த மைதானம் கேலரி வசதியுடன் புதுப்பிக்க கொடுக்கப்படும் என்றார். இது தவிர ஆத்தூர் ஒன்றியத்திற்குட்பட்ட சீவல்சரகு ஊராட்சியில் சிறு விளையாட்டு அரங்கம் அமைக்கப்பட்டு வருகிறது. அதன்மூலம் கால்பந்து மட்டுமின்றி தடகளம், கூடை பந்து, கைப்பந்து, கையுந்து பந்து, கபாடி வீரர்களும் பயன்பெறுவார்கள் என்றார்.

அதன் பின்னர் முதல்பரிசை பெற்ற மேட்டுப்பட்டி எஸ்.டி., எஸ்.ஏ அணிக்கும் இரண்டாம் பரிசை பெற்ற என்.பஞ்சம்பட்டி ஸ்கார்பியன்ஸ் புட்பால் கிளப் அணிக்கும் மற்றும் மூன்று மற்றும் நான்காம் பரிசை பெற்ற அணிகளுக்கு பரிசு கோப்பையுடன் ரொக்கப்பரிசும் வழங்கி பாராட்டினார். நடுவர்களாக செயல்பட்டவர்களுக்கும் நினைவு பரிசை வழங்கினார்.

நிகழ்ச்சியில் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. பொருளாளர் சத்தியமூர்த்தி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், ஒன்றிய செயலாளர் பிள்ளையார் நத்தம் முருகேசன், தி.மு.க. நிர்வாகி அம்பை ரவி, திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஷ், ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் மணிகண்டன், இளைஞரணி அமைப்பாளர் ராஜ கணேஷ், அரசு ஒப்பந்தகாரர்கள் ஜீசஸ் அகஸ்டின், மெல்வின், விக்னேஷ்வரன், ஒன்றிய துணை செயலாளர் வசந்தா கென்னடி, முன்னாள் ஊராட்சி செயலாளர் கென்னடி, கிளை செயலாளர் தாஸ் வேளாங்க கண்ணி, மற்றும் ஸ்கார்பியன்ஸ் புட்பால் அணியைச் சேர்ந்த நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள்: தி.மு.க. தொழிலாளர் அணி சார்பில்

# தமிழ்நாடு முழுவதும் ஏழை மக்களுக்கு நலத்திட்ட உதவிகள்!

## நிர்வாகிகளுக்கு அணி செயலாளர் பி.டி.சி.ஜி. செல்வராஜ் வேண்டுகோள்!

சென்னை, மே 27–

ஜூன் 3 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளினை முன்னிட்டு தி.மு.க. தொழிலாளர் அணியின் சார்பில் தமிழ்நாடு முழுவதும் ஏழை மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி கொண்டாடிட வேண்டுமென தொழிலாளர் அணி நிர்வாகிகளுக்கு தி.மு.க. தொழிலாளர் அணிச் செயலாளர் பி.டி.சி.ஜி. செல்வராஜ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் தமது அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் பதினான்காவது வயதில், இந்தி எதிர்ப்புக் குரல் எழுப்புவதில் அவரது பொதுவாழ்வு தொடங்கி; ஒரு பேச்சாளராக; எழுத்தாளராக; நாளிதழ் ஆசிரியராக; நாடக ஆசிரியராக; நடிகராக; திரைப்படக் கலைஞராக; இலக்கிய மேதையாக; முதுபெரும் புலவராக; அரசியல் மேதையாக; சிறந்த நிர்வாகியாக விளங்கியவர் முத்தமிழ றிஞர் கலைஞர்.

தந்தை பெரியாரால் துவக்கப்பட்டு, பேரறிஞர் அண்ணாவால் வளர்க்கப்பட்ட திராவிட இயக்கத்தை இன்னுமொரு நூற்றாண்டு காலத்திற்கு எடுத்துச் செல்வதற்கு வழிகாட்டியவர் முத்தமிழறிஞர் கலைஞர்.

அதோடு, நாற்பது ஆண்டுகட்கு மேலாக ஒரு கட்சியின் தலைவராக; ஒன்பது முறைக்கு மேல் சிறைக் கோட்டம் புகுந்தவராக; ஐம்பது ஆண்டுகட்கு மேலாகச் சட்டப் பேரவை உறுப்பினராக; ஐந்து முறை தமிழகத்தின் முதலமைச்சராக; எழுபத்தைந்து திரைப்படங்களுக்குமேல் வசனம் எழுதியவராக; புலவராகவும் புரவலராகவும் விளங்கிய வர் நம் முத்தமிழறிஞர் கலைஞர்.

இத்தகு ஒப்பாருமிக்காருமில்லா “முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழா” வை தி.மு.க. தொழிலாளர் அணியின் சார்பில் தமிழகமெங்கும் வருகிற சூன் 3 ஆம் நாளன்று நலத்திட்ட உதவிகள் செய்து நம்மால் முடிந்த அளவிலான பணிகளை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளில் செய்வதன் மூலமாக, அந்தச் செந்தமிழர் தலைவர், எங்கும் நிறைந்தும் வாழ்கிறார். எல்லோரையும் வாழ வைக்கிறார். வாழ்வாங்கு வாழ வைத்துக் கொண்டிருக்கிறார் என்பதை நிரூபிப்போம்!” என கழகத் தலைவர் தளபதி அவர்கள் ஏற்கனவே அறிக்கை வாயிலாக விடுத்த வேண்டுகோளின்படி, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளினை “நலத்திட்ட உதவிகள் வழங்கும் நாளாக” கடைபிடித்து, மக்களுக்கு உதவிகள் வழங்கிட வேண்டுமென மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் தொழிலாளர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்களையும் கழக தொழிலாளர் அணித் தோழர்களை கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

### வீ.ஜெகதீசன் தலைமையில் - பெரம்பலூர், குன்னம் சட்டமன்றத் தொகுதி

# தகவல் தொழில்நுட்ப அணிக் கூட்டம்!

## தங்க.சித்தார்த்தன் - கழக நிர்வாகிகள் பங்கேற்பு!

பெரம்பலூர், மே 27 –

பெரம்பலூர், குன்னம் சட்டமன்றத் தொகுதி தகவல் தொழில் நுட்ப அணி ஆலோசனைக் கூட்டம், மாவட்டக் கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தலைமையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் தங்க. சித்தார்த்தன் கலந்து கொண்டு 2026 சட்டமன்றத் தேர்தல் குறித்து பேசினார்.


இதில் மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் குன்னம் சி.ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் செ.அண்ணாதுரை, பட்டுச்செல்வி ராஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை.பாஸ்கர், நூருல்ஹிதா இஸ்மாயில், சன்.சம்பத், மாவட்டப் பொருளாளர் செ.ரவிச்சந்திரன்,

ஒன்றியக் கழகச் செயலாளர் என். கிருஷ்ணமூர்த்தி, எம்.ராஜ்குமார், செ.நல்லதம்பி, தி.மதியழகன், சி. ராஜேந்திரன், ஒன்றியப் பொறுப்பாளர்கள் டாக்டர் செ.வல்லபன், நீ.ஜெகதீஷ்வரன், பூலாம்பாடி பேரூர்ச் செயலாளர் செல்வலெட்சுமி சேகர்,லெப்பைக் குடிக்காடு பேரூர்ச் செயலாளர் ஏ.எஸ். ஜாகிர் உசேன், பெரம்பலூர் மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ரமேஷ் ராஜேந்திரன்,

தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர் தினேஷ், குன்னம் சட்டமன்ற தொகுதி ஒருங்கிணைப்பாளர் சிவனேசன், ஆலத்தூர் மேற்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் ஆனந்த், பெரம்பலூர் நகர ஒருங்கிணைப்பாளர் தினேஷ், வேப்பந்தட்டை மேற்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் சுல்தான், வேப்பத்தட்டை கிழக்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் ராஜா உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இராயபுரம் சி. நவமணி
### மே 27 (2012)



**இராயபுரம் பகுதிக் கழக அவைத்தலைவராகவும், தமிழக அனைத்து வணிகர்கள் சங்கத் தலைவராகவும் பணியாற்றியவர்.**

**கழகம் நடத்திய பல்வேறு அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**“தம்பி நவமணி என்னிடம் பாசமும், நேசமும் கொண்டவர். வணிகர்கள் சம்பந்தப்பட்ட எந்தப் பிரச்சினை என்றாலும் நேரில் என்னை வந்து சந்தித்து, அதுகுறித்து விவாதிக்க அவர் தவறியதே இல்லை. வணிகர்களுக்கும், கழகத்திற்கும் இடையே ஒரு பாலமாக செயல்பட்டவர்” என்று தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**




# தி.மு.க.
# இளைஞர் அணி

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

## ஒன்றிய-நகர-பகுதி-பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

தஞ்சாவூர் தெற்கு, தஞ்சாவூர் மத்திய, கோவை வடக்கு, கோவை மாநகர் மற்றும் கோவை தெற்கு மாவட்டங்களில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 27.05.2025 செவ்வாய்க்கிழமை | காலை 10.00 மணி | தஞ்சாவூர் தெற்கு | ஏஏஏ பேலஸ், பேருந்து நிலையம் அருகில், பட்டுக்கோட்டை. |
| | காலை 10.00 மணி | கோவை வடக்கு | தாரஹா மஹால், பெரியநாயக்கன்பாளையம். |
| | மதியம் 12.00 மணி | கோவை மாநகர் | கிஸ்கால் கிராண்ட் ஹோட்டல், வடகோவை. |
| | மாலை 5.30 மணி | கோவை தெற்கு | ஸ்ரீ தங்கவேல் அய்யன் கே.வி.கே.திருமண மண்டபம், கோவில்பாளையம் சாலை, பெரிய நெகமம். |
| 28.05.2025 புதன்கிழமை | காலை 10.00 மணி | தஞ்சாவூர் மத்திய | அறிஞர் அண்ணா மஹால், கீழவாசல், தஞ்சாவூர். |

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 22-05-2025

கலைஞர் 100
1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி